நிதி , பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு - நலன்புரி நன்மைகள் சபை - சமூகப் பாதுகாப்புத் திட்டம்

பதவி வெற்றிடங்கள் .

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் சமூக பாதுகாப்பு திட்டத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியும் அனுபவமும் உள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## திட்ட உத்தியோகத்தர் (நிதி)

பதவிகளின் எண்ணிக்கை – 01

சம்பளக் அளவுத்திட்டம் - PS 06 - A ( முகாமைத்துவ சேவைகள் திணைகளைச் சுற்றறிக்கை 01/2019 படி)

மாதாந்த சம்பளம் - PS 06 - A (ரூ. 64,000.00 மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்)

தகுதிகள் ( கீழே 1 அல்லது 2 அல்லது 3 )

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / கணக்கியல்/ வணிகத்தில் பெற்றுக்கொண்ட பட்டம் .

அல்லது

சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் இளங்கலை பட்டத்திற்கு சமமானதாகும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சமமான தகுதியைப் பெற்றிருத்தல்.

அல்லது

சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பிலிருந்து அசோசியேட் உறுப்பினர் அல்லது அதற்கு சமமான தொழில்முறை தகுதி பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை 7 தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 03 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. துறை தொடர்பான பதவிக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகுதி நிலை 6 தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல்.

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 08 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. துறை தொடர்பான பதவிக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகுதி நிலை 5 தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல்.

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 13 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு : மேற்கண்ட தகவல் தொடர்பான தகுதிகள் மற்றும் Terms of Reference (தற்காலிகம்)

பின்வரும் இணையதளங்களைப் பார்வையிடுவதன் மூலம் பெறலாம்.

https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies
https://www.wbb.gov.lk/web/si/jobs

ஆட்சேர்ப்பு முறை:

அடிப்படைத் தகுதிகள் மற்றும் பணி அனுபவத்தைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் பட்டியலிடப்பட்டு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

ஆட்சேர்ப்பு அடிப்படை:

வெளி விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டால், அந்தந்தப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலும், அரச உத்தியோகத்தர்கள் தெரிவானால் , இரண்டாம் நிலை அடிப்படையிலும் பணியமர்த்தப்படுவர்.

ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்:

இந்த நியமனம் அடிப்படையில்,ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார் , செயல்திறன் மதிப்பீட்டின் பின்னர், திருப்திகரமான சேவை வழங்கப்பட்டிருந்தால், அதிகபட்சம் 03 ஆண்டுகள் வரை ஆண்டுதோறும் மறு நியமனம் புதுப்பிப்பதற்காக பரிசீலிக்கப்படும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால்

வெளியிடப்பட்ட 01/2019 சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் அது தொடர்பான அல்லது அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகளும் மேற்படி நியமனத்திற்குப் பொருந்தும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தை பின்வரும் இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies
https://www.wbb.gov.lk/web/si/jobs

21.05.2024 அன்று அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை,ஜெ .ஆர் ஜெயவர்தன நிலையம் ,கொழும்பு - 07 என்ற முகவரிக்கு மட்டுமே பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அரசு / நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். தாமதமான, முழுமையடையாத அல்லது இறுதித் தேதிக்குப் பிறகு பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும், விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இந்த விளம்பரத்தை ரத்து செய்தல், திருத்தம்செய்தல், அல்லது மாற்றம் செய்தல், விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் குறித்து நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதி முடிவாகக் கருதப்படும்.

**கருத்திட்டப் பணிப்பாளர் ,**
**சமூகப் பாதுகாப்பு கருத்திட்டம்,**
**நலன்புரி நன்மைகள் சபை,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,**
**கொழும்பு -01**